Registered as a news paper.

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 07 (02.11.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:33

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சீ-1639)

❖ மீள்குடியமர்வு ❖ புனர்வாழ்வு ❖ புனரமைப்பு ❖ அபிவிருத்தி ❖ காணி அதிகாரங்களுடன்

# வடக்கு கிழக்கை ஐந்தாண்டுகள் நிர்வகிக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை!

## புலிகளின் திட்டவரைபு கூறுகிறது

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கிலே மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்திறனுடன் விரைவாக நிறைவேற்றி, வடக்கு - கிழக்கு மக்களின் உடனடித் தேவைகளை வழங்குவதற்காக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உருவாக்கப்படும் என, விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபில் கூறப்பட்டுள்ளது.**

இந்தத் திட்டவரைபில் மேலும், வடக்கு - கிழக்குப் பகுதிகளை ஐந்து ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும் அதிகாரம் கொண்ட இந்த சபைக்கான உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட தரப்புக்களே தீர்மானிக்கும். இந்த அதிகாரசபை - தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்கத் தரப்பு மற்றும் வடக்கு - கிழக்கு முஸ்லீம் சமூகத்தால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

ஐந்து ஆண்டுகளுக்குள் இறுதித் தீர்வு காணப்படாவிட்டால் - முடிவில், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையில் நியமிக்கப்படும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சர்வதேச கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் தேர்தல் நடத்தும்.

இந்த இடைக்கால அதிகார சபை - மீள்குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலாக அபிவிருத்தி, வரி விதித்தல், வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்துக்கான திட்டங்களையே வரைபில் புலிகள் குறிப்பிட்டுள்ளனர்

### சிஹல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க

விடுதலைப் புலிகள் தமது அதிகாரத்தை நிறுவிக்கொள்ள, தமிழீழத் திட்டத்தினையே இடைக்கால நிர்வாக யோசனையாக முன்வைத்துள்ளார்கள்.

இவ்வாறு - சிஹல உறுமய தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகயோசனை குறித்து கருத்து வெளியிட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகயோசனையை நடைமுறைப்படுத்த, நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

இந்த விடயத்தில், அரசுக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்




ரோட்டில இறங்கிறதென்டா பயமா இருக்குது.

**ஹக்கீம்-ரணில் லண்டனில் சந்திப்பு!**

(கொழும்பு)

# இலங்கை அரசியல் அமைப்புக்கு உட்பட்ட வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது சாத்தியமில்லை



### அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கில் ஒரு பூரண அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகத்தை நிறுவுவதற்கு காணி (நிலம்) முக்கியமானதாகும். நிலப்பரப்புக்களும், மக்கள் தமது சொந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டதும், இதனால் - இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இந்நிலையில், காணிகள் தொடர்பாக முக்கியமான அதிகாரம் இந்தக் கட்டமைப்புக்குள் வரவேண்டியது தவிர்க்கமுடியாது. என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர்

## ஹக்கீம்-ரணில் லண்டனில் சந்திப்பு!

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று லண்டனிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம், புலிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)



திலிருந்து வெளியேற்றப்பட்டதும், இதனால் - இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இந்நிலையில், காணிகள் தொடர்பாக முக்கியமான அதிகாரம் இந்தக் கட்டமைப்புக்குள் வரவேண்டியது தவிர்க்கமுடியாது. என அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இடைக்கால நிர்வாக அமைப்பு அரசியல் அமைப்புக்கு முரணானது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக நாங்கள் பலமுறை விளக்கியுள்ளோம்.

இலங்கையின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு, தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு கோரமுடியாது. இந்த அரசியல் அமைப்பில், எந்தக் கட்டத்திலும் தமிழ்மக்கள் இணக்கப்படவில்லை. அவர்களுடைய அங்கீகாரமும் (10 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தீர்வுத் திட்டம் குறித்து

# மாத இறுதியில் பேச்சுக்கு ஏற்பாடு செய்க; நோர்வேயிடம் இலங்கை அரசு கோரிக்கை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கையளித்துள்ள இடைக்கால நிர்வாகம் தெடர்பான திட்ட யோசனைகள் குறித்து, இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதமுற்பகுதியில் பேச்சுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரசாங்கம் நோர்வேயிடம் கோரியுள்ளது.

இவ்வாறு, அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபைக் கையேற்ற பின்னர், அது குறித்து கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

விடுதலைப் புலிகளின் திட்ட யோசனைகளுக்கும், அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபுக்கும் இடையில் வேறுபாடுகள் அமைந்துள்ளன. இந்த வேறுபாட்டை நீக்கி, விடுதலைப் புலிகளின் திட்டவரைபை புதுப்பித்து அடுத்த வருட முற்பகுதியில் பேச்சுக்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் முதன் முறையாக, எழுத்துமூலமான தீர்வுத்திட்ட ஆலோசனையொன்றை வழங்கியுள்ளனர். இந்த நிகழ்வு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதன் அடிப்படையில், இரு தரப்புக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குரிய ஏற்பாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ட்ரக் வண்டி–மோட்டார் சைக்கிள் யாழ். நகரப் பகுதியில் மோதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் இராணுவ ட்ரக் வண்டியொன்று மோட்டார் சைக்கிளை மோதியதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ். நகரப்பகுதியில் உள்ள காங்கேசன்துறை வீதியின் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சமபமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யாழ்.நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த எஸ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் திட்டவரைபை ஐரோப்பிய யூனியன் ஆராய்கிறதாம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால், நோர்வே தரப்பினூடாக அரசிடம் கையளிக்கப்பட்ட, இடைக்கால நிர்வாக வரைபு பற்றி ஐரோப்பிய யூனியன் - தாம் முக்கிய கவனத்துக்கு எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுபற்றி, கொழும்பிலுள்ள ஐரோப்பிய யூனியனின் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள- இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக ,தமது அமைப்பு முக்கிய கவனத்துக்கு எடுத்துள்ளதாகவும்,

இவ்வரைபானது சமாதான நடவடிக்கையில் ஒரு முன்னேற்றப்படி என்றும் வெகுவிரைவில் நேரடிப்பேச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்காக விடுதலைப் புலிகள் முன்வைத்த திட்ட வரைவு

**வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தினை ஏற்படுத்துவதற்காக - புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைவு இங்கு முழுமையாக வெளியிடப்படுகிறது.**

சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள் மனித உரிமைகள் அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுய நிர்ணய உரிமைக்கு அமைவாகவும்,

இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டுவருவதற்கு உறுதிபூண்டும்,

இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும், நோர்வே மக்களும், சர்தேச சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியிலான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனங்கண்டு,

இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து, வடக்கு - கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்திறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு-கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்காக, வடக்கு - கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கு உறுதிபூண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயல்முறையாக இருந்தமையையும், இலங்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்துப் பதவிக்குவந்த இலங்கை அரசாங்கங்களால் ஒருதலைப்பட்டமாக மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டுவந்தமையையும் கவனத்திலெடுத்து,

அடுத்தடுத்து பதவிகளுக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரச வன்முறை மற்றும் அரசுகள் பின்னிருந்து நடத்திய வன்முறை ஆகியனவற்றை மனதில் நிறுத்தியும்,

1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற அரசை அமைக்குமாறு, தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமது பிரதிநிதிகளுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் கவனத்திலெடுத்தும்,

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக, வன்முறையின்றி அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாதுபோன பின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும் தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை மனதில் நிறுத்தியும்,

முதலில் டிசம்பர் 2000 இலும் பின்னர் டிசம்பர் 2001 ஆம் ஆண்டிலும் ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து - வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்புநிலை திரும்புவதற்கான ஒரு உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு நீதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுக்களுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை மீளநினைவுபடுத்தியும்,

2001 போர்நிறுத்த அறிவிப்புக்கு மதிப்பளித்து, தற்போதைய இலங்கை அரசாங்கம் தானும் ஓர் போர்நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் கவனத்திற்கொண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு - கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதீக கட்டுமானங்களுக்கு அழிவை விளைவித்த போர், வடக்கு - கிழக்கிற்கே பிராதானமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, வடக்கு - கிழக்கே இலங்கைத்தீவில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் உணர்ந்து,

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ் மக்கள், தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்கள் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை இனங்கண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு - கிழக்கின் பெரும்பான்மையான பகுதி மீது, தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டையும் நியாயாதிக்கத்தையும் செயற்றிறன்வாய்ந்த முறையில் செயற்படுத்துகின்றமையைக் கருத்திற்கொண்டு,

பேச்சுவார்த்தை மூலமான ஒரு இறுதித் தீர்வை அடைவதும், அதனை அமுல்படுத்துவதும், ஒரு நீண்ட காலமெடுக்கும் கருமமாக அமையலாம் என்பதை உணர்ந்து,

அனைத்து அகதிகளும், இடம்பெயர்ந்த நபர்களும் - பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச்செல்வதற்கான அவசியத்தையும் அவர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்குதடையின்றிச் சென்று, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களது உடனடித் தேவையையும் வலியுறுத்தி,

இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும், வடக்கு - கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை மனதிற்கொண்டு,

அமைதிப்பேச்சுக்களின்போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப குழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும், மீண்டும் மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச்சென்ற இந்த உபகுழுக்களது அமைப்பு முறையே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பதையும் இனங்கண்டு,

இலங்கை அரசாங்கம் தனது 2000 ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு - ஓர் இடைக்கால அதிகார சபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு மதிப்பளித்து,

சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை உணர்ந்து,



போரினால் சிதைக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவொரு ஆட்சியியல் செயற்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்டவேண்டியது தேவை என்பதை இனங்கண்டு,

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை இனங்கண்டு,

1972 ஆம் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களது உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றவில்லை என்பதையும், அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கினைத் தமிழ் மக்களுக்கு வழங்க மறுத்ததையும் மனத்திற்கொண்டு,

கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறைகளூடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புக்களுக்கிடையே உடன்படிக்கையினை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தை கவனத்திற்கொண்டு,

போரிடும் தரப்புகளிடையே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மாத்திரமிருந்தே பெறப்படும் சட்டரீதியான பலத்தைக் கொண்டு போரினால் சிதைந்த நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற்கான முன்னுதாரணங்களில் நம்பிக்கைகொண்டும்,

இலங்கை கண்காணிப்புக்குழுவின் (SLMM) பணியை உள்ளடக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம், SIHRN மற்றும் வடக்கு-கிழக்கு மீள்கட்டுமான நிதியம் (NERF) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் கவனத்திற்கொண்டு,

மேலே கூறப்பட்டவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புகளான தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இத்தால் இணங்குகின்றன.

## 1. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை

பேச்சுவார்த்தை மூலமான இறுதித் தீர்வு எட்டப்பட்டு அமுல்படுத்தப்படும் வரை, வடக்கு - கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரபை (Interim Self - Governing Authority -ISGA) நிறுவப்படும்.

ISGA இல் முஸ்லீம் சமூகத்தினது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்துகொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.

## 2. ISGA இன் அங்கத்துவ அமைப்பு

2:1 இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புக்களால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ISGA கொண்டிருக்கும்.

2:2 ISGA இன் அங்கத்துவ அமைப்பு கீழ்வருமாறு அமையும்.

- 2:2. a. தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்
- 2:2. b. இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும்
- 2:2. c. வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

2:3 கீழ்வருவனவற்றை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

- 2:3. a. ISGA இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.
- 2:3. b. மேலுள்ள உபவிதி (a) இற்குப் பங்கம் ஏற்படாத வகையில் வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்கள் ISGA இல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.

2:4 தலைவர் (Chairperson) ISGA இலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ISGA இன் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவார்.

2:5 வடக்கு - கிழக்கிற்கான பிரதான செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்குத் தேவைப்படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதேனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

## 3.தேர்தல்கள்

சரத்துக்கள் 2.2 மற்றும் 2.3 இன் ஏற்பாடுகள் ISGA இற்கான தேர்தல்கள் நடாத்தப்படும் வரை தொடரும். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படாமலும் அமுல்படுத்தப்படாமலும் விட்டால், இந்த ஐந்தாண்டு காலப்பகுதி முடிவடைகையில் தேர்தல்கள் நடாத்தப்படும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரமானதும் நேரடியானதுமான தேர்தல்களை - சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடாத்தும்.

## 4. மனித உரிமைகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்கு - கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும். ISGA இயற்றும் சட்டம், ஒழுங்குமுறை, தீர்ப்பு, கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஓர் சுயாதீனமான ஆணைக்குழு இந்த மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப்படுவதை உறுதிசெய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனிநபரிடமிருந்தும் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்கவேண்டிய நட்டஈட்டைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீள நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்யும்.

## 5. மதச்சார்பின்மை

வடக்கு - கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது.

## 6. பாகுபாட்டுக்கெதிரான தடை

வடக்குக் கிழக்கில் மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண், பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ISGA உறுதி செய்யும்.

## 7. இலஞ்ச ஊழலைத் தடுத்தல்

ISGA தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யும்.

## 8. அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு

கலாச்சாரம் அல்லது மதம் தொடர்பாக, ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச் சலுகைகளை அல்லது அவர்கள் மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்குமுறை, விதி, கட்டளை அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

## 9. ISGA இன் நியாயாதிக்கம்

9.1 மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (இதன் பின்னால் RRRD எனக் குறிப்பிடப்படுகின்றது) வரி விதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்கு - கிழக்கை ஆளுகை செய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்குள், வடக்கு - கிழக்கிலும் வடக்கு - கிழக்கிற்காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

9.2 இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

## 10. அதிகாரங்களை வகைபிரித்தல்.

வடக்கு - கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்புக்களுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளது சுயாதீனத்தை உறுதிசெய்வதற்கு ISGA பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் சரத்து 4 (மனித உரிமைகள்) மற்றும் 22 இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாதவாறு, இந்த சரத்தின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புக்களே, இந்த உடன்படிக்கையை அர்த்தப்படுத்தி அமுல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும், இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்கு தனியானதும் தனித்துவமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும். (9 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்





நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம்செய்த நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரும், கிறீன் கட்சிப் பிரமுகருமான கீற்லொக்கை, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

# அன்று புலிகளைப் பிடிப்பதற்கு வீதித் தடை இன்று அவர்களைப் பாதுகாக்க வீதித் தடை!

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய கூறுகிறார்

(கொழும்பு)

கொழும்பில் தங்கியிருக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கைது செய்யவே அன்று வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. ஆனால் இன்றோ புலிகள் இயக்கத்தவர்களை பாதுகாக்க வீதித்தடை போடப்படுகிறது என முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.எம்.பி.கொட்டகதெனிய நேற்றுமுன்தினம் சிஹல உறுமய அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழ் - சிங்கள தலைவர் ஒன்றுகூடல் என்ற பெயரில் கொழும்பில் 'பொங்கு தமிழ்' எழுச்சி விழாவே நடத்தப்பட்டது.

இந்த விழாவில் கலந்து கொள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து வந்த தமிழ் மக்களில் 75 வீத மானவர்கள் புலிகள் இயக்க ஆதரவாளர்களே. அவர்களைப் பாதுகாப்பதற்கென புதிய நகரமண்டபம் அமைந்துள்ள வீதி மூடப்பட்டது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா போதைப் பொருள் வர்த்தகருடன் கொண்டிருந்த தொடர்புகளை அம்பலப்படுத்தியது சிஹல உறுமயவே. ஆகையால் உள்துறை அமைச்சர் சிஹல உறுமய மீது ஆத்திரம் கொண்டு பழிதீர்த்துக் கொள்ள முற்படுகிறார் என்றும் கொட்டகதெனிய தெரிவித்தார்.

# குற்றவாளிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்து வந்த பொலிஸார்!

## பாணந்துறையில் சோதனையின்போது கண்டுபிடிப்பு

குற்றவாளிகளுக்கு, பொலிஸார் ஆயுதங்கள் விநியோகித்துவந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளத்.

பாணந்துறையில் வீடு ஒன்றைச் சோதனையிட்டபோதே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

பொலிஸாரின் காணாமற்போன ஆயுதங்கள் சில இந்தச் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்களை பொலிஸார் விற்பனை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு விசாரணைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினர் பயன்படுத்தும் 4.5 ரக பிஸ்ரல் ஒன்றும் இந்தச் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களை விற்பனை செய்ததன் மூலம் பெருந்தொகையான பணம் சம்பாதிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (01)

# சம்பள உயர்வு, பொருட்களின் விலைக் குறைப்பு; அடுத்த வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படும்!

## நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள 2003 - 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் - அரச ஊழியர் சம்பள உயர்வு, பொருட்களின் விலைக் குறைப்பு என்பவற்றை மையமாகக்கொண்டு தயாரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி, அரசைப் பொறுப்பேற்ற பின்னர் நாட்டின் பொருளாதாரம் 14 சதவீத வளர்ச்சி கண்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கப்போவதாகவும், அதற்கான திட்டங்களைத் தீட்டிவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான திட்டங்களால் அரசாங்கத்தை எதுவும் செய்யமுடியாது என்றும் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும் என்றும் தோற்கடிப்பதாக நினைத்துக் கொண்டு மக்களுக்கு தீமைகள் செய்யவேண்டாம் என்றும், சொக்ஸி தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால், மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் இல்லாமல் போகும் நிலைமைகள் உருவாகலாம் என்றும் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனுக்கு விஜயம்!



(லண்டன்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு செல்லும் வழியில் பிரிட்டனுக்குச் சென்றுள்ளார்.

லண்டனில் தங்கியுள்ள முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்த நகல்திட்டம் மற்றும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்து கொள்வது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படுமெனத் தெரிய வருகின்றது.

அத்துடன், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை குறித்த நகல் திட்டத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, வொஷிங்ரனில் நாளை முதல் ஐந்தாம் திகதி வரை தங்கியிருக்கவுள்ள பிரதமர், நாளை மறுநாள் அமெரிக்க ஜனா திபதி ஜோர்ஜ் புஷ்ஷை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகள், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் பிராந்திய சர்வதேச உறவுகள் என்பன குறித்து ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டணியின் மத்திய குழு அடுத்த மாதம் கூடுகின்றது!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுக்கூட்டத்தைக் கூட்டுமாறு சில மாவட்டக் கிளைகள் அந்தக் கட்சியின் செயலாளர் இரா. சம்பந்தனிடம் கோரியுள்ளன.

இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்க அடுத்த மாத நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழு கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில், அல்லது 15 ஆம் 16 ஆம் திகதிகளில், இரு தினங்கள் தொடர்சசியாக இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணியின் தலைமைப்பதவி தொடர்பாக முடிவு எடுப்பதற்கே இந்தக் கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரச ஊழியருக்கு விசேட கொடுப்பனவு

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கு இந்த ஆண்டு முடிவில் 10 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு ஒன்று வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான அனுமதி அமைச்சரவையில் பெறப்படவுள்ளது.

இந்தத் தொகை சம்பந்தப்பட்ட ஊழியருக்கு இரண்டு மாத சம்பளங்கள் வழங்கப்படும்போது அதனுடன் சேர்த்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவி விலகினார்

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் பதவி விலகலை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பதாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எஸ்.என்.ஈபோட் நெற் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினரே தமது பதவி விலகல் கடிதத்தை கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியிருந்தார். தமது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு பதவி உயர்வு வழங்க உதவியதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்தே இவர் பதவி விலகுவதாக அறிவித்திருந்தார்.

# புலனாய்வாளர்கள் கொலைகள் சமாதான முயற்சியை பாதிக்குமாம்!

## கருத்துக் கணிப்பொன்றில் தகவல்

(கொழும்பு)

அரச புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்களையும், அவர்களுக்குத் தகவல் வழங்குபவர்களையும் கொலை செய்வது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என கருத்துக்கணிப்பொன்று தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பின்படி புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களையும், தகவல் வழங்குபவர்களையும் கொலை செய்வது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என 84.2 வீதமான மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின்படி, இந்தக் கொலைகள் சமாதான முயற்சிகளில் எத்தகைய பாதிப்பினையும் ஏற்படுத்தாது என 57.3 வீதமான மகக்ள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்திலிருந்து திரும்பியவர்கள் வவுனியா நலன்புரி நிலையத்தில்!

அண்மைக்காலங்களில் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய 238 குடும்பங்களைச் சேர்ந்த 920 பேர் வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த 8 குடும்பங்களின் 30 பேரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 52 குடும்பங்களின் 195 பேரும், மன்னாரைச் சேர்ந்த 11 குடும்பங்களின் 34 பேரும், கிளிநொச்சியைச் சேர்ந்த 111 குடும்பங்களின் 411 பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 55 குடும்பங்களின் 243 பேரும், பிற மாவட்டம் ஒன்றைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் உள்ள 7 பேருமே நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாகவும் இவர்களில் மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 229 பேர் படையினர் தமது வீடுகளை ஆக்கிரமித்துள்ளதால் மீளக் குடியமர முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் 2 ஆயிரத்து 365 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

3 ஆயிரத்து 108 குடும்பங்கள் வசித்துவந்த இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வந்ததோடு, பெறுமதிமிக்க சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன் சூறையாடப்பட்டும் உள்ளன.


## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) விளக்கங்களை 2003.11.09 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

### பணிநிலைகள்

01. வரி அறவீட்டாளர்
02. எழுதுநர்

### தகமைகள்

**பணிநிலை - 01**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை

**பணிநிலை - 02**

01. க.பொ.த உயர்தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை

**வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:**
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும்**
நாள் : 2003.11.12
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப் படமாட்டாது.
02. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(520)

# தரம் 9 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை

(புன்னாலைக்கட்டுவன்)

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட தரம் - 9 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பொதுப்பரீட்சை, இம்மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

அத்துடன், கடந்த வருடங்களைப் போன்று, இந்த வருடமும் பரீட்சை விடைத்தாள்கள் - கல்வி வலயமட்டத்திலே மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

மேலும், பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட தரம் - 6 தொடக்கம், தரம் - 8 வரையான ஆண்டிறுதிப் பரீட்சைப்புள்ளிகளுடன், மேற்படி தரம் - 9 ஆண்டிறுதிப் பரீட்சைப் புள்ளிகளையும் சேர்த்து இறுதிப் புள்ளி கணிப்பிடப்படவுள்ளதுடன், தரம் 6 தொடக்கம், தரம் 9 வரையான பாடசாலைமட்டக் கணிப்பீட்டுப் புள்ளியையும் அடிப்படையாகக் கொண்டு, அதற்குரிய பெறுபேற்றுத் தரங்களைத் தயாரிக்கும் பொறுப்பு, இந்த வருடம்முதல் ஒவ்வொரு கல்வி வலயங்களிடம் ஒப்படைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி வலயங்களால் பரீட்சைப் பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டு, டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவும் ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (83)

# மாம்பழம் சந்தியில் கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றில் ஒப்படைக்க பொலிஸாருக்குப் பணிப்பு

அரியாலை - மாம்பழம் சந்தியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பொதுமக்களின் பொருட்களை - நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு, நீதிமன்றத்தால் - பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரியாலை - மாம்பழம் சந்தியில், இராணுவ பவள் கவசவாகனம் ஒன்று - முச்சக்கர வண்டிமீது மோதியதால் ஏற்பட்ட விபத்தினைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கும், படையினருக்கும் இடையே கைகலப்புச் சம்பவம். இடம்பெற்றமை தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தின்போது, பொதுமக்களின் பலபொருட்கள் - சம்பவம் நடைபெற்ற இடத்தில் தவறவிடப்பட்டுள்ளன. அந்தப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றி, யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர். இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் உடமைகளை, உடனடியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு, யாழ். மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறான பொதுமக்களின் பொருட்களை - எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு, நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (44)

# கப்பூது பிரதேசத்துக்கு வழங்கப்படும் நீரைச் சுத்திகரிக்க நடவடிக்கை

கப்பூது பிரதேசத்திற்கு நன்னீர் வழங்கும் திட்டத்திற்கமைவாக அவ்வூர் தனியார் வீடொன்றில் அமைந்துள்ள கிணறொன்றின் மூலமே தண்ணீர் பெறப்பட்டு, நீர்விநியோகிக்கத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் சுகாதார பரிசோதகருக்கு இந்நீர் மாசடைந்து இருப்பதாகப் பலர் முறையிட்டதன் காரணமாக, இக்கிணற்று நீரை, சுகாதார பரிசோதகர் பரிசோதித்தபோது, அந்நீரில் கிருமிகள் படிந்திருப்பது தெரியவந்தது. இதனால், கிணற்றுக்குக் குளோரீன் போட்டு, நீரைச் சுத்தமாக்கச் சுகாதார பரிசோதகர் முனைந்த வேளை, கிணற்று உரிமையாளர், குளோரீன் பேட்டால் இக்கிணற்றிலிருந்து பாய்ச்சப்படும் நீரால் தனது முந்திரிகைச் செடி பதிப்படைந்துவிடுமெனக் கூறி, தடுத்துவிட்டார்.

இப்பிரச்சினையைத் தீர்க்க இக்கிணற்றுக்கருகில் தொட்டியொன்றை அமைத்து, அத்தொட்டிக்குள் செலுத்தும் நீருக்குக் குளோரீன் கலந்து, நீரை விநியோகிக்கலாமென்று பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்த கருத்தைப் பிரதேச செயலகம் ஏற்றுக்கொண்டு, அதனைச் செயற்படுதத முனைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

## வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அழிவுக்காக 87 பேருக்கு நஷ்டஈடு

பலத்த மழை மற்றும் கடும்காற்றினால், இவ்வருட முற்பகுதியில் அழிவுகள் ஏற்பட்டு பாதிப்படைந்த - வலி.தென்மேற்கு பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த 87 குடும்பங்களுக்கு, நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நிவாரணம்கோரி விண்ணப்பம் செய்தவர்களில் 87 பேருக்குக் கொடுப்பனவு வழங்க சிபார்சு செய்யப்பட்டு, அதற்கான பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்திற்கு - வடக்கு - கிழக்கு மாகாகண சமூகநலன்புரி திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி வந்துசேர்ந்ததும், இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று வலி.தென்மேற்கு பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (43 - 44)

## உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கு

யாழப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான மாதாந்த செயலமர்வும், சம்பளக் காசோலை வழங்கலும், எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும், தவறாது கலந்துகொள்ளுமாறு, பீடாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

**வாழ்க வளமுடன்**

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**மூன்றாவது அகவையில்**



பெயர் : பா.சாருஜன்

முகவரி : பூதர்மட லேன், நீர்வேலி.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

**வாழ்க வளமுடன்**



சிறாரின் பெயர்:---------------------------------

முகவரி :---------------------------------

பிறந்த ஆண்டு:---------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------

பெற்றார் ஒப்பம்

# சஞ்சீவன் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி - 2003

தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால், யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே கோட்ட, வலய மட்டங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் தெரிவாகி, மாவட்ட இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற அணிகளான - யாழ். இந்துக் கல்லூரி அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மஷன் கல்லூரி அணியும் - சஞ்சீவன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக மோதவுள்ளன.

**இடம்:** யாழ். இந்துக் கல்லூரி மைதானம்.

**காலம்:** 03.11.2003 (திங்கள்)

**நேரம்:** பி.ப. 2- 00 மணி

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் நிறைவடையும்

**தமிழ் மாணவர் ஒன்றியம்**
**யாழ்.மாவட்டம்.**

விளம்பர அனுசரனை: நமது ஈழநாடு

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.11.2003 ஆம் நாளுக்கு முன்னதாக, எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த (உ/த) அல்லது க.பொ.த (சா/த) உடன், ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-** பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003. காலை 10.00 மணி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

**குறிப்பு:** நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி/1758)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# தாயகத்தை தலைநிமிர வைத்தவர்கள்




## பிரிந்தா சோமசுந்தரம்.


ஆற்றல்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியான இவர், 2003 க.பொ.த. உயர்தர வர்த்தகப்பிரிவில் கல்வி பயில்கின்றார். பாடசாலை வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனையாவார். 1999 ஆம் ஆண்டில் 15 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம்பெற்ற அணியின் ஒரு விராங்கனை. 2000 ஆம் ஆண்டில் அணித்தலைவியாக விளையாடி, மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடம்பெறுவதற்கு வழிவகுத்தவர். 2001, 2002 ஆம் ஆண்டுகளில் 17 வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் முறையே 2 ஆம், 1 ஆம் இடம்பெற்ற அணியின் வீராங்கனையாகவும், 2003 இல்- 19 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கனையாகவும் விளையாடினார்.

கல்வளை விளையாட்டுக்கழக அங்கத்தவரான இவர், சண்டிலிப்பாய் பிரதேசசெயலக அணியில் இடம்பெற்று, 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் அந்த அணி - மாவட்டத்தில் வெற்றிபெறுவதற்கு வழிவகுத்தவர். 2002 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட அணியில் இடம்பெற்று, சிறப்புற விளையாடி, மாகாண அணிக்குத் தெரிவாகி, தேசியப் போட்டியில் சிறப்புற விளையாடியவர்.

## சங்கீதா திருச்செல்வம்


திறமை

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியான இவர் - 1998, 1999 ஆம் ஆண்டுகளில் 15 வயதுப் பிரிவுப் போட்டிகளில் மாகாணமட்டப் போட்டிகளில் 2 ஆம் இடம்பெற்ற அணியின் ஒரு வராங்கனையாகவும், 17 வயதுப் பிரிவுப் போட்டியில் 2000 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடம்பெற்ற அணியினதும், 2001 ஆம் ஆண்டு மாகாணமட்டப் போட்டியில் 2 ஆம் இடம்பெற்ற அணியினதும் வீராங்கனையாக. விளங்கி, சிறப்பாக விளையாடினார். 19 வயதுப் பிரிவில் 2002, 2003 ஆம் ஆண்டுகளில் மாகாண மட்டத்தில் 1 ஆம் இடம்பெற்ற அணியின் தலைவியாக இருந்து, அணி வெற்றிபெறச் சிறப்பாக விளையாடினார்.

கல்வளை விளையாட்டுக் கழக அங்கத்தவராக உள்ள இவர், சண்டிலிப்பாய் பிரதேசசெயலக வலைப்பந்தாட்ட அணி 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் முதலாமிடம் பெற்ற அணியில் சிறப்புற விளையாடி 2001, 2002 ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவானார். 2002 ஆம் ஆண்டு மாவட்ட அணியின் உப தலைவியாகவும், வடக்கு - கிழக்கு மாகாண அணியின் உபதலைவியாகவும் விளங்கிய இவர், பல சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றி, சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டார். குறிப்பாக 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்திலும், இடம்பெயர்வின் பின் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்திலும் மேற்கொண்டார். ஆரம்ப காலங்களில் மெய்வல்லுநர் நிகழ்வுகளில் பங்குபற்றி பாடசாலை மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர். பின் வலைப்பந்தாட்ட அணியிலும் இடம் பெற்றார்.

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்து வாழ்ந்துவரும்வேளையில் கிளிநொச்சி மாவட்ட அணிக்காக விளையாடியவர்.

## ராதா ஆனந்தகிளி.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்திலும், இடம்பெயர்வின் பின் வல்வை மகளிர் மகா வித்தியாலயத்திலும் மேற்கொண்டார். ஆரம்ப காலங்களில் மெய்வல்லுநர் நிகழ்வுகளில் பங்குபற்றி, பாடசாலை மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர். பின் வலைப்பந்தாட்ட அணியிலும் இடம் பெற்றார்.

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும்வேளையில், கிளிநொச்சி மாவட்ட அணிக்காக விளையாடியவர்.


பெருமை

## நித்தியா இராஜரட்ணம்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவியான இவர், பாடசாலைமட்ட வலைப்பந்தாட்ட அணியில் 15, 17 வயதுப் பிரிவு அணிக்காக விளையாடியவர்.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அங்கத்தவரான இவர், ஆரம்பகாலத்தில் கூடைப் பந்தாட்டத்தில் நாட்டம் கொண்டு விளையாடி, 2001 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட அணியில் இடம் பெற்றவர்.


மேன்மை

அதன்பின், வலைப்பந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட்டு மாவட்ட அணிக்குத் தெரிவானார்.

2002 ஆம் ஆண்டு சமாதான விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட அணிக்காக GS ஆக விளையாடியவர். நல்லூர் பிரதேசசபையில் மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் - குண்டெறிதல், 800 M ஓட்டம், உயரம் பாய்தல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளார். பாடசாலை பற்மின்றன் அணித்தலைவராக (2002 ஆம் ஆண்டு) இருந்தவர்.

# வேண்டாம் பெண்டாட்டி

2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு அவ்வளவு தூரமில்லை. இந்தப் போட்டிகளில் பதினாறு நாடுகள் பங்குபற்றும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், கால இடைவெளி - இம்முறை இருந்த ஆறுவாரத்திலிருந்து நான்கு வாரங்களாகக் குறைக்கப்படும். அதேவேளை, இரண்டாவது கட்டமான சுப்பர் 8 கட்டமைப்பின்படி, ஒவ்வொரு அணியும் ஆறு ஆட்டங்கள் கூடுதலாக விளையாடும் என்று அறிவிக்கப்படுகிறது.


நடத்தியே தீருவோம்

இதெல்லாம் இப்படி இருக்க, அவுஸ்திரேலிய மெல்பேர்ண் நகரிலிருந்து வெளிவரும் THE AGE எனும் பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று, கரிபியன் நாடுகளில் 2007 உலகக் கிண்ணப்போட்டிகள் நடைபெறாது என்று தெரிவிக்கிறது. அப்படித் தீர்மானிக்கப்பட்ட கரிபியன் நாடுகளில்- வசதி வாய்ப்புகளின் குறைபாடுகள் காரணமாக அமையலாம் என்றும், அப்படியாயின் அவுஸ்திரேலியாவில் உலகக்கிண்ணப் போட்டிகளை நடாத்த, அவுஸ்திரேலியா தயாராக இருக்கும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஆனால், இதனை ICC மறுத்துள்ளது. கரி பியன் நாடுகள் - 2007 உலகக்கிண்ணப் போட்டி களை நடாத்த பூரண தகுதியோடேயே இருக்கி றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளின் மைதானங்கள் மற்றும் உடகட்டமைப்பு வசதிகள் நன்றாக அபிவிருத்தியடைந்துள்ளன என் கிறது ICC. அத்தோடு- மேற்கிந்தியத்தீவுகள், ICC இரண்டும் உலகக் கிண்ணப்போட்டிகள் தொடர்பில், உத்தியோகபூர்வமான ஒப்பந்தங்கள் செய்யவும் இருக்கிறார்கள். எனவே, 2007 உலகக் கிண்ணப்போட்டிகள் - மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறுவது உறுதி என்பது தெளிவு. அப்படியானால், அவுஸ்திரேலியப் பத்திரிகை இப்படி ஒரு அநாவசிய வதந்தியைப் பரப்பக் காரணம் என்ன? இது பற்றிச் சில ஆர்வலர்கள் கருத்துக்கூறும்போது- எல்லாம் வெள்ளையர்களால்தான் முடியும் என்று நம்பும்நிலையில், கறுப்பின மக்கள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்கள் எதைச்செய்தாலும், அதனைக் கொச்சைப்படுத்துவதில் ஒரு ஆனந்தமும், நல்ல செயற்பாடுகளைச் சிதறடிக்கும் திட்டமும் இதில் இருக்கக்கூடும் என்கிறார்கள். இது சரிபோலவே தோன்றுகின்றது. - **ரோஜா**



யார் முகமற்றவர்கள்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் FIFA முன்னெடுத்திருக்கும் -உலக உதைபந்தாட்ட அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் உதவித்தொகைக்கு, முதல் நாடாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த உதவித்திட்டத்தின் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் மணிலால் பெர்னாண்டோ- இந்தப் பணம் பத்தேகானாவில் அமைக்கப்படவிருக்கும் உதைபந்தாட்ட அரங்கிற்குச் செலவிடப்படும் என்றும், இது முக்கியமாக -உதைபந்தாட்ட அபிவிருத்திக்குச் செலவிடப்படும் என்றும், இந்த அரங்கம் பல்வேறு வசதிகள் கொண்ட SPORTS COMPLEX ஆக அமையும் என்றும் கூறியுள்ளார். மேலும் கருத்துக் கூறியுள்ள மணிலால் பெர்னான்டோ - ஐ.நா

## பெரிய அரங்கு எமக்கு எப்போது?

சபை மற்றும் உலக உதைபந்தாட்ட சம்மேளனம் இரண்டும் வடகிழக்கில் உதைபந்தாட்டத்தை விருத்தி செய்ய, ரூபா 50,000 வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

- **சித்ரா**

# கண்ணுபடப் போகுதைய்யா

எதிர்பாராத இன்ப அதிர்ச்சியொன்று ஆசியக் கிரிக்கெட் ரசிகர்களுக்கு அதுவும் குறிப்பாக, தென்னாசிய ரசிகர்களுக்கு. இப்போதே வாசகர்கள் சிக்கெனப் பிடித்திருப்பார்கள் விடயம் என்னவென்று.

இவ்வளவு விரைவில் இந்தியா - பாகிஸ்தானுக்குத் தனது தேசிய கிரிக்கெட் அணியை அனுப்பும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அதுவும் மூன்று டெஸ்ட் போட்டிகள், ஏழு ஒருநாள் போட்டிகள். இந்தியா சின்னதாக ஒரு நிபந்தனை போட்டிருக்கிறது. அதுவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுதான். அதாவது, தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள நாட்கள் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் முடிந்து, ஐந்தாவது நாளிலேயே தொடங்குகிறது. எனவே, சிறிது அவகாசம் தாருங்கள். அதாவது, 2004 தொடக்கத்தில் என்று கேட்டிருக்கிறார்கள்.



அரசியல் தூதுவராகும் பொறுப்புணர்ச்சி



எனக்கு ஒரு பரீட்சைதான்

1989 -1990 ஆம் ஆண்டின் பின் - இதுவரையில் இந்தியா- பாகிஸ்தான் நாட்டுக்குச் சென்று, டெஸ்ட் விளையாடவில்லை. இருந்தும் இப்போது இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக, இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ச்சியாகக் கிரிக்கெட் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது. இந்தியா - பெப்ரவரி 14 இல் அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியா திரும்பும். அதையடுத்து, சிறிது ஓய்வின் பின் - இந்திய கிரிக்கெட் அணி - பாகிஸ்தான் கிளம்பும்.

ஆட்டங்கள் நடைபெறும் இடங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எனினும், தென்னாபிரிக்கா விளையாட மறுத்த மைதானங்கள், இந்தியப் பயணத்தின்போது விலக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகின்றது. சில ஆட்டங்கள், தென்னாபிரிக்காவால் தீண்டத்தகாதது என்று ஒதுக்கப்பட்ட கராச்சி, பெஷாவர் நகரங்களில்கூட நடைபெறக்கூடும். கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு வரமுடியாதென்று தென்னாபிரிக்கா மறுத்ததையும், சில மைதானங்களில் விளையாடமாடடோம் என்று அடம்பிடித்தமையால் -சுற்றுப்பயணமே தடைப்பட்டுப் பின்னர் உயிர்த்ததும், கிரிக்கெட் ரசிகர்களின் ஆதரவைப் பாகிஸ்தானுக்குப் பெருமளவில் சேர்த்திருந்தது, தென்னாபிரிக்காவை அருவருப்புடன் பார்க்கவைத்தது. இப்பொழுது இந்திய அணி -பாகிஸ்தான் வரப்போகிறது என்றவுடன், கண்ணுக்குக்கண், பல்லுக்குப் பல்லென்று நின்றவர்கள்-எவ்வளவு உயர்ந்து நிற்கிறார்கள் என்பதுடன், தென்னாபிரிக்கா அணிக்குக் கன்னத்தில் அறைந்தது போன்ற ஒரு மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. - **நிர்மலன்**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# சிங்கமென எண்ணிச் சுருண்டு போனவர்கள்

என்னதான் சொன்னாலும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பந்தா, கூடித் தான்போய்விட்டது. பாகிஸ்தான் பாவம். காலில் விழாதகுறையாகத்தான் தென்னாபிரிக்க கிரிகெட் அணியைப் பாகிஸதானுக்கு வருமாறு கேட்டுக்கொண்டது. இறுதியாகத் தென்னாபிரிக்காவும் சிலசில நிபந்தனைகளுடன் பாகிஸ்தான் வந்தது. வந்ததும் ஆரம்பித்தது ஒருநாள் சர்வதேசப் போட்டியை. வளர்ந்துவரும் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்வது, பலம்வாய்ந்த தென்னாபிரிக்க அணிக்கு பெரிய சவாலாக இராது என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எந்தநிலையிலும் விட்டுக்கொடுக்காமல் இறுதிப்பந்துவரை போராடுபவர்கள் பாகிஸ்தானியர்கள் என்பதும் தெரிந்தவிடயம்.

அதேபோலவே, முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும் பாகிஸ்தான் - தென்னாபிரிக்காவுடன் சவால்விட்டு வென்றது. அடுத்துவந்த இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில், அநாயசமாக வென்றது. தென்னாபிரிக்க அணி - பாகிஸ்தான் வருவதற்குக் காட்டிய தயக்கத்திற்கும், மிதப்பிற்கும் பதிலடியாக இந்த இரண்டு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் விளையாடிக்காட்டிய தென்றே எடுத்துக்கொள்ளலாம். அதிலும் புதிய தலைவர் இன்சமாம் உல ஹக்கின் தலைமைத்துவத்தின் கீழ், பாகிஸ்தான் அபாரமாக விளையாடிக்கொண்டிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது.

லாகூரில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில், ஐம்பது ஓவர்களில் பாகிஸ்தான் குவித்த ஓட்டங்களில், ஆறு விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்கள். புதிய நட்சத்திரம் யசீர் ஹமீர் யூசுப் யுகானாவின் அரைச்சதங்கள் மற்றும் சொஹைப் மாலீக்கின் 51 பந்தில் 81 ஓட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்கன. பதிலுக்கு ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்கா, சோடைபோகவில்லை என்பது உண்மையே. ஆரம்பத் துடுப்பாட்டவீரர் டிப்பெனர் எடுதத ஓட்டங்கள், ஆட்டமிழக்காது 110. மெக்கன்சி எடுத்த ஓட்டங்கள் 62. இருந்தாலும், தென்னாபிரிகசா வெற்றியை நெருங்கவிடாமல், பாகிஸ்தானுக்கு மேன்மை தேடிக்கொடுத்தவர் சொஹெப் அக்தார்தான். அவர் பெற்ற நான்கு விககெட்டுக்களும் - தென்னாபிரிக்கா தாமாகவே இரண்டு ரன் அவுட்டுகளுக்கும் ஆளாகியதும், அவர்களது எண்ணிக்கையை ஆறு விக்கெட் இழப்பிற்கு, 269 ரன்கள் என்ற எண்ணிக்கையில் கட்டுப்படுத்தியது. பாகிஸ்தான் 8 ரன்களால் வெற்றிகண்டது.

ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இது என்பதால், இரண்டாவது போட்டிக்கு மிகத் தன்னம்பிக்கையுடன் தென்னாபிரிக்கா தன்னைத் தயார்படுத்திக்கொண்டது. ஆனால், முதல் ஆட்டத்தைவிட இலகுவில் பாகிஸ்தான் - தென்னாபிரிக்காவைக் கவிழ்த்துவிட்டது. பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்த தென்னாபிரிக்காவினால், அவர்களின் ரன் குவிப்பைமட்டும் கட்டுக்குள் கொண்டுவரமுடியவில்லை. மீண்டும் யுகானா 65, மாலிக் 45 என்று குவிக்க, 7 விக்கெட் இழப்பிற்கு பாகிஸ்தான் பெற்ற ஓட்டங்கள் 267. இது பாகிஸ்தானைப் பொறுத்தவரை சராசரி ஐந்திற்கு மேற்பட்ட ஓட்ட எண்ணிக்கை என்பதால், அவர்கள் நம்பிக்கையுடனேயே இருந்திருப்பார்கள். அதற்கேற்றாற்போல, முகமது சமியும், முகமது ஹபீசும் தலா மூன்று விக்கெட்டை கவிழ்க்க, ஐம்பது ஓவர்களில் ஒன்பது விக்கெட் இழப்பிற்குத் தென்னாபிரிக்காவால் பெறமுடிந்தது 225 ஓட்டங்கள் மட்டுமே. மீண்டும் பாகிஸ்தானுக்கு நல்லதொரு வெற்றி 42 ஓட்டங்களால்.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா முதலாவது வெற்றிக்கனியைச் சுவைத்தது. அதுவும் மழையால் ஆட்டம் குழம்ப, டக்வேர்த் லூயிஸ் முறையில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றதாகத் தீர்மானிக்கப்பட்டது. என்றாலும், அடுத்து வந்த இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் தென்னாபிரிக்கா, பாகிஸ்தானுக்கு விட்டுக் கொடுக்கவில்லை. எனவே, ஐந்து போட்டி கொண்ட தொடர் - 3:2 என்ற வகையில் தென்னாபிரிக்காவிற்கு வெற்றியாக அமைநதது. என்றாலும், முதலிரண்டு போட்டிகளிலும் பாகிஸ்தான் - தென்னாபிரிக்காவிற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது என்பது உண்மை. இதைவிட, இரண்டு டெஸ்ட் போட்டித் தொடரில், பாகிஸ்தான் 1:0 என்ற வகையில் தென்னாபிரிக்காவை மண்கௌவ வைத்தது இன்னொரு சுவையானசெய்தி.

**முன்னா**



அமைதியாக அழிப்போம்

# உலகமே வெறுக்குதப்பா

மீண்டும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் கௌசால் லொக்கு ஆராச்சி பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இவர் ஒரு விருந்துபசாரத்தில் கலந்துகொண்டுவிட்டு, அதிகாலையில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில், பேரூந்துக்காகக் காத்துக்கொண்டு நின்ற தாயையும், மகளையும் காரினால் மோத, தாய் மரணமடைந்ததும், மகள் தீவிர காயங்களுக்கு உள்ளாகியதும் பழைய செய்தி. அந்தச் செய்தி பழைய செய்தியாகப் போய்விடுமோ என்ற பயமாக இருக்கிறது இப்போது. ஏனெனில், இவர் அங்கம் வகிக்கும் புளூம் பீல்ட் கழகம் - இவர் உள்ளூர் கிரிக்கெட் ஆட்டங்களில் கலந்துகொள்ள ஏதுவாகத் தடையை நீக்குமாறு கோரி, கிரிக்கெட்சபையிடம் விண்ணப்பம் செய்யும் என்று கிரிக்கெட்சபையின் செயலாளர் மொகான் டி சில்வா அறிவித்துள்ளார். லொக்கு ஆராச்சியின் கழகம் இந்த வகையில் இரண்டு முறை விண்ணப்துள்ளதாகவும், உள்ளூர் ஆட்டங்களில் பங்குகொண்டால், அவுஸ்திரேலியா அணியின் இலங்கை விஜயத்தின்போது இவர் விளையாடத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள, அது உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.



ஒண்ணுமே புரியலே

ஏற்கனவே, இவர் மீது தடை இருக்கிறது. மேலும், இவர் நேரடியாகவே சம்பந்தப்பட்ட விபத்துத் தொடர்பின் வழக்கும் இருக்கிறது. ஆனால், லொக்கு ஆராச்சிக்கு வக்காலத்து வாங்கி, அவரை சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்துகொள்ளச்செய்ய முயற்சிகளும் நடைபெறுகின்றன. என்ன உலகம் என்று ஆதங்கமாக இருக்கிறது. சிலவேளைகளில் இவர் இலங்கை அணிக்காக விளையாடலாம். உலக நாடுகளுக்கெல்லாம் சென்று வரலாம். இவரது அபாரத் திறமையைக் கண்டு - மைதானம் புளகாங்கிதம் அடையலாம், சிலவேளைகளில், ஆட்டநாயகன் விருதும் கிடைக்கலாம், அதன்பின்னர் மில்லியன் கணக்கில் பணம், பல மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்கள்...... அப்பப்பா நினைக்கவே புல்லரிக்கிறது. ஆனால், இவரது அதமக்குணத்தால் இறந்துபோன தாயை நினைக்கும் போது, எங்கள் மனதில் எந்தளவு வேதனை ஏற்படுகிறது? ஆடுபவர்கள் எல்லோரும் ஆடட்டும். நாங்கள் அந்தத் தாயின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம். **ஞானி**

# நெல்லிக்காய் மூட்டையா?

மிகக்குறுகிய காலத்தில் அபாரமாகப் பாகிஸ்தான் அணியை வளர்த்துவிட்டவர் ஜாவட் மியான்டட். அவரை அவதூறு செய்து ஏசியது தொடர்பில், பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக் கடுமையான அபராதத் தொகை விதிக்கப்படுவார். அல்லது ஆட்டங்களில் இருந்து தடை செய்யப்படுவார் என்று செய்திகள் வருகின்றன.

இந்தவகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுக்காற்றுக் குழுவின் முன்னர் ஆஜராகுமாறு சக்லெய்ன் முஷ்டாக் அறிவிக்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்காவிற்கான டெஸ்ட் தொடரில் சக்லெய்னுக்கு அணியில் இடம் கொடாததன் பேரில், பயிற்றுநர் மியான்டட்டையும், முகாமையாளர் ஹரூன் ரஷீடையும் இவர் தொலைபேசியில் அழைத்து, அவதூறு செய்துள்ளார் என்பதே குற்றச்சாட்டு.

இதுதொடர்பில் கருத்துக்கூறிய மியான்டட் - சக்லெய்ன் விரக்திநிலையில் இப்படியாக நடந்து கொண்டதாகக்கூறி, மன்னிப்புக்கேட்டார். இருந்தும், விடயம் தற்போது ஒழுக்காற்றுக் குழுவினரின் கையில் உள்ளது. இனி ஒழுக்காற்றுக் குழுவே முடிவெடுக்கவேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் நான் ஒழுக்காற்றுக் குழுவின்



ரொம்ப ஓவராப் பேசுறார்

# வேண்டாம்

முன் பதிலளிக்கையில் - சக்லெய்னுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்றே கேட்டுக் கொள்வேன் என்று கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுக்காற்று விதிகளின் கீழ், இத்தகைய குற்றங்களுக்கு 900 அமெரிக்க டொலர்கள் தண்டம் அல்லது உள்ளூர் ஆட்டங்கள் மூன்றில் பங்குகொள்வதில் தடைசெய்யப்படுவார். ஏலவே சக்லெய்ன் - பங்களாதேசுடனான ஒரு ரெஸ்ட்போட்டிக்கும், தென்னாபிரிக்கவுடனான ஒரு ஆட்டத்திற்கும் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதுவே அவரது கோபத்தைக் கிளறியிருக்கிறது.

பொதுவாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்பில், கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு ஆதங்கம். அதாவது, உலகத் தரம் வாய்ந்த எத்தனையோ பேரைக் கிரிக்கெட் உலகிற்குத் தந்தது பாகிஸ்தான். ஆனால், திடீர் மாற்றங்கள், குழப்பங்கள், அரசியல் தலையீடுகள், திறமையானவர்கள் திடீர் திடீரெனக் காணாமற்போதல், மீண்டும் காட்சிதருதல், அதிருப்திகள், கோபங்கள், விரக்திகள்... அடுக்கிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் யாருக்கு லாபம். பாகிஸ்தான் கிரிக்கெட் சார்ந்தவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

**-அழகு.**


# ஆபிரிக்காவில் கரிபியன்ஸ்

முதன் முதலாக டெஸ்ட் தொடர் ஒன்றிற்காக அவுஸ்திரேலியா சென்ற சிம்பாப்வே அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் படுதோல்வியையே சந்தித்தது. இப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளுக்காகச் சிம்பாப்வேயில் வந்திறங்கி இருக்கிறது. அதனால், அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தோல்விகளுக்குப் பின்னும், மனவுறுதி குலையாதவர்களாகச் சிம்பாவே அணியினர் காணப்படுகினறார்கள் என்பதே உண்மை. சிம்பாப்வே அணியினர் - அவுஸ்திரேலியாவில் கண்ட தோல்வியைப் பின்தள்ளிவிட்டு, தைரியமாகவே மேற்கிந்தியத்தீவுகள் அணியை எதிர்கொள்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தலைவர் பீற்றர். சிங்கொக்கா அவர்



இளமைக் கூட்டம் எமதே

தொடர்ந்து கருத்துக் கூறுகையில் - அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக முன்னூறு ஓட்டங்களுக்கமேல் பெற்றதென்பதே, மற்றைய அணிகளுடன் சமதையாக விளையாடமுடியும் என்பதற்குப் போதுமானது என்கிறார். ஒருவகையில் சிம்பாப்வேயின் பல நட்சத்திர ஆட்டக்காரர்கள் இந்த வருடத்தில் ஓய்வுபெற்றுவிட்டார்கள். அண்டி பிளவர், ஹென்றி ஒலங்கா இருவரும், சிம்பாவே கிரிக்கெட் அணியிலிருந்து விலகியமைக்கான காரணம் எல்லோரும் அறிந்ததே. அதோடு, முன்னதாகவே கெய்விட்டல், அலிஸ்ரர்கம்பெல் இருவரும்கூட சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் இருந்து ஒதுங்கிவிட்டார்கள். இந்நிலையில், அணித்தலைவர் ஹீத் ஸ்ரிக்கின் பணி மிகக் கடுமையானதுதான்.



சிம்பாப்வேயை சிம்பிளா எடுக்காதீங்க

தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி - சிம்பாப்வேயில் வந்திறங்கி இருக்கிறது. நவம்பர் நான்காம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி- ஹராரேயில் ஆரம்பமாக உள்ளது. சில விமர்சகர்கள் கருத்துக்கூறும்போது - அண்டி பிளவர் இல்லாமலே அவுஸ்திரேலியாவில் தோற்றாலும், சமாளித்த சிம்பாப்வே - மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் சமாளிக்கும் என்று கூறியிருக்கிறார். அதோடு, தமது தாயக மண்ணில் விளையாடுவது இன்னும் சிறிது அனுகூலமாக இருக்கும் என்றும் கூறியிருக்கிறார். சிம்பாப்வே வருவதற்கு தமக்கு எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லையென்று மேற்கிந்திய அணி கூறி, சிம்பாப்வேயில் வந்திறங்கி இருப்பது, சிம்பாப்வே அணிக்கு ஒரு வெற்றி. அதைவிட, வெற்றி சிம்பாப்வே அரசுக்கு. இங்கிலாந்து, நியூஸிலாந்து போன்ற நாடுகள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையென்று, சிம்பாவே நாட்டை ஓரங்கட்ட முயற்சிக்கையில், மேற்கிந்திய அணியினர் எதுவித பந்தாவும் இல்லாமல் சிம்பாப்வே வந்துள்ளார்கள். நீரை அடித்தால் நீர் விலகாது என்பது இதுதானோ? மேற்கிந்தியத்தீவுகள் அணியின் விபரம்.

பிறைன்லாரா (தலைவர்) - ராம்நரேஷ் சர்வான் (உபதலைவர்) - கிறிஸ்கைல் - வேவல்ஹைஸ் ட்ரன் கங்கா - சிவ்நரெய்ன் சந்தர்போல் - மார்லன் சாமுவெல்ஸ்- ஒமாரி பாங்கஸ் றிட்லி ஜேக்கப்ஸ் (விக்கெட் காப்பாளர்)- கார்ல்ரன் போ (விக்கெட் காப்பாளர்) மேர்வின் டிலோன் வெஸ்வட் டிரேக்ஸ் - கொரிகொலிமோர் பிடல் எட்வட்ஸ்- ரவிரம்பால் - ஜெரோம் டெயிலர்.

**-சரண்யன்.**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாடு என்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ஒரு சம்பவமும் பல்வேறு சந்தேகங்களும்

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம், யாழ். - கண்டி வீதியில் குற்றத்தடுப்பு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழீழ காவற்துறையினர், அந்த வழியே வந்த வாகனங்களை மறித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில், ஒரு வாகனத்திலிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றினர். உரப்பை ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இந்தத் துப்பாக்கிக்கு உரியவர்கள் இருவரும் பெரும்பான்மை இனத்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் 4.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

முதலில் தமது கடமைப் பொறுப்பில் சரியாகச் செயற்பட்ட தமிழீழ காவற்துறையை பாராட்ட வேண்டியது அவசியமாகும்.

விசாரணையின்போது கைதானவர்கள் இருவரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், பரந்தன் பகுதியில் வீதிப் புனரமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமல்லாது அவர்கள் இருவரும் வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் 'சதேர்ன் குறூப்' என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இனங்காணப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சரி, அவர்கள் வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தென்பகுதி பெரும்பான்மையின மக்கள் என்றுதான் வைத்துக்கொண்டாலும் அவர்கள் ரி-56 ரக துப்பாக்கியை வைத்திருந்ததன் காரணம் என்ன?

வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு துப்பாக்கியையும் பயன்படுத்துகிறார்களா? சரி அப்படித்தான் என்று அவர்கள் கூறினாலும்கூட (!?) அதனைப் பகிரங்கமாக வைத்திருக்காது மறைவாக உரப்பையினுள் மறைத்து எடுத்துவரக் காரணம் என்ன?

'சதேர்ன் குறூப்' நிறுவனத்தினருக்கும் சம்பந்தப்பட்ட இருவருக்கும் இந்த ரி-56 ரக துப்பாக்கிக்கும் என்ன தொடர்பு?

கைதானவர்கள் வந்த வாகனம் யாருக்குரியது? எங்கிருந்து அந்த வாகனம் எடுத்துவரப்பட்டது?

சந்தேகத்திற்குரிய நபர்களை காவற்துறையினர் தடுத்துநிறுத்தி விசாரித்தபோது அவர்கள் பதற்றமடையக் காரணம் என்ன?

அவசரமாகச் செல்லவேண்டுமென்று வாகனத்தை எடுத்துச்செல்ல முற்பட்டதன் நோக்கமென்ன?

எவ்வளவு காலமாக இவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்? இவர்களுடன் பணியாற்றும் ஏனையோர் எப்படிப்பட்டவர்கள்?

இவர்கள் பணியாற்றுவதாகக் கூறப்படும் 'சதேர்ன் குறூப்' நிறுவனம் யாருக்கு உரிமையானது?

அவர்களுக்கு இந்த வீதிப் புனரமைப்புக்கான பணி, யாரால் வழங்கப்பட்டது?

அந்த நிறுவனத்துக்கும், அதன் நிர்வாகத்துக்கும் வேறு ஏதாவது சமூக, அரசியல் பின்னணியும், நோக்கமும் உள்ளதா?

இந்த நிறுவனத்தில் மொத்தம் எத்தனை பெரும்பான்மை இனத்தவர்கள் பணியாற்றுகின்றனர்?

இவர்களது வீதிப் புனரமைப்புப் பணியின் பெறுபேறு என்ன?

இப்படிப் பல கேள்விகளுக்கான விளக்கமான விடைகள் இப்போது தேடப்படவேண்டியதாக உள்ளது.

வீதிப் புனரமைப்புப் பணியுடன் வேறு ஏதாவது பணியும் இந்த் 'சதேர்ன் குறூப்' நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழவே செய்கிறது. ஏ-9 பாதை திறப்பு முதல் தென்பகுதியில் இருந்து பல்லினத்தவரும் குறிப்பாக பெரும்பான்மை இனத்தவர் பெருமளவிலும், மடை திறந்த வெள்ளம் போன்று வரிசை வரிசையாக, வகை வகையான வாகனங்களில் வடபகுதி நோக்கி அள்ளுப்பட்டுவந்த வண்ணமேயுள்ளனர்.

யாத்திரையாகவும் பணிநோக்கத்தோடும் வர்த்தகத் திட்டத்துடனும் இன்னும் பல்வேறு இலக்குடனும் வந்து போய்க்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான பெரும்பான்மையினத்தவருள் பன்முக நோக்குடனான ஊடுருவல் பேர்வழிகளும், உளவாளிகளும் இருக்கக்கூடும் என்பது சந்தேகத்திற்குரிய விடயமல்ல...


பல கடந்தகால நிகழ்வுகளின் அனுபவப் பதிவுகள் இதற்குச் சான்றாகும். ஏ-9 பாதை திறப்பும், சமாதானச் சூழலும், புரிந்துணர்வு உடன்படிக்கையும் உண்மையில் தென்பகுதி பெரும்பான்மை இனத்தவர்களுக்கே எல்லா வகையிலும் பயனளிப்பதாக உள்ளது என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது.

இதேவேளை தமிழ்மக்களுக்கு இந்தச் சமாதானச் சூழல் என்பது எந்தவிதமான வாழ்க்கை உத்தரவாதத்தையும் இன்னமும் வழங்கவில்லை என்பதே நிஜம். மாறாக நம்பிக்கையீனமும், பதற்றமும், பீதியுமே அவர்களைத் தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளது எனலாம்.

இந்த நிலையில் இந்தத் துப்பாக்கி கைப்பற்றல் சம்பவத்தின் பின்னணி எந்தவகைப்பட்டது என்பது இன்னமும் பூரணமாகத் தெரியாவிட்டாலும் தமிழ்மக்களை அது ஏதோ ஒருவகையில் எச்சரிக்கை செய்வதாகவே உள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல...

ஒரு முள் குத்திய அனுபவம் காடளவு எச்சரிக்கைக்கு சமம்.

## நாடும் நடப்பும்



செய்தி - விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத்திற்கான திட்டவரைபு அரசிடம் கையளிப்பு

# அமெரிக்க கடற்படைத் தளபதியுடன் வைஸ் அட்மிரல் சந்தகிரி சந்திப்பு!

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள கடற்படை தளபதி வைஷ் அட்மிரல் தயாசந்தகிரி அங்கு பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

அமெரிக்காவின் கடற்படைக் கல்லூரியில் அமெரிக்க கடல் நடவடிக்கைக்குப் பொறுப்பான தளபதி அட்மிரல் வேர்ன் கிளார்க் தலைமையில் நடந்த 16 ஆவது சர்வதேச கடற்பலம் சம்பந்தமான கருத்தரங்கிலும் வைஷ் அட்மிரல் தயா சந்தகிரி கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் அமெரிக்கக் கடற்படையின் பல்வேறு பிராந்தியங்களுக்கான தளபதிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக வொஷிங்ரனிலுள்ள இலங்கைத் தூதரகம் தகவல் வெளியிடுகையில்,

இரு நாட்டு பாதுகாப்பு உறவுகள் குறித்து ஆராய்ந்து ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது தொடர்பாகக் கலந்துரையாட அமெரிக்க கடற்படை தயா சந்தகிரிக்கு அழைப்பு விடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்க கரையோர காவற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் எச்.கொலின்ஸ் உட்பட பல்வேறு உயர் அதிகாரிகளுடனும் தயாசந்தகிரி பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் இரு நாட்டு கடற்படையினருக்கும் இடையிலான பயிற்சி மற்றும் ஆயுதப் பரிகரணங்களை அதிகரிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## மாணவியைத் தாக்கிய ஆசிரியர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்!

பதினொரு வயது மாணவி ஒருவரைத் தாக்கினார் என்று குற்றம்சாட்டியே ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மாணவி ஒருவர் அதிக சத்தமிட்டார் என்ற காரணத்தால் ஆசிரியர் அவரைத் தாக்கியுள்ளார். இவ்வாறு மாணவியைத் தாக்கிய ஆசிரியரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (01)

## புனரமைப்புச் செய்யப்படவேண்டிய வீதிகளின் விபரம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத்துக்குச் சொந்தமான வீதிகள் பராமரிப்பு இன்மையாலும், கையகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளினால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதற்கான துரித நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், வீதிகளை மீளவும் உரியநிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்களால் ஒவ்வொரு பிரதேசசபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளின் விபரங்களை மற்றும் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகளின் விபரங்களையும் உடன் அனுப்பிவைக்குமாறு மாவட்டச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக சிகரெட் வைத்திருந்தவர் புத்தளம் பகுதியில் பொலிஸாரால் கைது!

(புத்தளம்)

சட்டவிரோதமான சிகரெட்டுக்கள் வைத்திருந்த ஒருவர் புத்தளம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இந்த சிகரெட்டுக்களின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் சிகரெட்டுக்கள் விற்பனையால் உள்நாட்டில் உற்பத்தியாகும் சிகரெட்டுக்கள் விற்பனை குறைந்து வருவதையடுத்து சில வெளிநாட்டு சிகரெட் வகைகளுக்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

எனினும் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக சிகரெட்டுக்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்களே தற்போது புத்தளம் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டன.

### புலிகளின் திட்டவரைபு தொடர்பாக

## ஜனாதிபதி - ஜே.வி.பியுடன் நேற்று சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான அவசரப் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட நிர்வாகத் திட்டவரைபு பற்றியே இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி சார்பில் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, அனுரா திஸாநாயக்க ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## தமிழ் ஆசிரியருக்கு பதிலாக சிங்கள ஆசிரியர் நியமனம்

### அமைச்சர் சந்திரசேகரன் கண்டனம்

(கொழும்பு)

ஹற்றன் - பத்தனையிலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையில் இருந்த தமிழ் ஆசிரியருக்குப் பதிலாக சிங்கள ஆசிரியர் ஒருவரை நியமித்தமை குறித்து மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்திய வம்சாவழியினரின் நன்மை கருதி மலையக ஆசிரியர்களைக் கொண்டு ஜேர்மனி அமைத்துக் கொடுத்து பாடசாலை இதுவாகும். இந்தப் பாடசாலையில் நூறுவீதம் தமிழர்களே சேர்க்கப்பட வேண்டும் என்றும் மலையக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பாடசாலையில் சிங்களவரை நியமித்தமை ஏற்றுக்கொள்ளத்தக்க செயல் அல்ல என்றும் தனது கண்டனத்தில் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (01)

# அதிகரிக்கும் சர்வதேச ஆதரவும் குழப்பும் உள்ளூர்க் கட்சிகளும்

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தென்னிலங்கையில் அரசியல் கட்சிகளின் கருத்துக்கள், விமர்சனங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாத ஒன்றைப்பற்றி இதுவரை பேசிக்கொண்டிருந்த தென்னிலங்கைக் கட்சிகள் - இனிமேல் கிடைக்கப்பெற்றதைப் பற்றி ஆராய்ந்து பேசப்போகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை பரிந்துரையைப் பற்றி, இதுவரை ஊகங்களுடன் மாத்திரமே தென்னிலங்கையின் பிரதான மற்றும் இனவாதக் கொள்கைகள் கொண்ட கட்சிகள் பேசிவந்தன.



இன்றுமுதல் அந்தக் கட்சிகளுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை பரிந்துரையின் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இது உண்மையில், இதுவரை காலமும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் காட்டப்பட்டுவந்த போக்கிற்கு வித்தியாசமானதே. இதுவரை காலமும், இனப்பிரச்சினைத் தீர்விற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும், ஆரம்பத்திலேயே வெளியிடப்படவில்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. பெரும்பாலும் ஆளும் கட்சிகள் - தீர்வுகளைத் தமக்குள்ளேயே வைத்திருந்து, தீர்வு ஒப்பந்தம் அல்லது இறுதி வடிவம் கிடைத்த பின்னரே அதனை வெளியிட்டு வந்தன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் - இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சிகள் அனைத்துக்கும் செல்வதால், வித்தியாசமான கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் - தமது யோசனையை, இலங்கை அரசாங்கம் நிராகரிக்க முடியாத வகையிலேயே தயாரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஏனெனில், இலங்கையின் சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், இனப்பிரச்சினைத் தீர்வுகள், சட்டவாக்கங்கள் என்பவற்றில் முக்கியமானவற்றை ஆராய்ந்து, அறிந்த பின்னரே - தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்கால திட்டவரைபைச் சமர்ப்பித்துள்ளனர்.

இது அவர்களைப் பொறுத்தவரையில், ஆயுதப்போராட்டம் என்றநிலையிலிருந்து - ஜனநாயகத்துக்கான வழியில் ஒரு பாரிய சர்வதேச அங்கீகாரமாகும். இந்த அங்கீகாரம்-தற்போது பல உலக நாடுகளிலிருந்து கிடைத்துள்ளதைக் குறிப்பிட்டு, தமது இடைக்கால வரைபைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாரிப்பதற்கு எந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்டார்களோ, அந்த நாடுகளின் பலமான ஆதரவு - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துள்ளது எனலாம். எனினும், குறிப்பாக இந்தியாவின் சாதகமான கருத்துக் கிடைக்குமானால், இந்த இடைக்காலத் தீர்வில் எவ்வித தடங்கல்களும் ஏற்படமாட்டாது. இலங்கையில் தற்சமயம் இனவாதக் கோணத்தில் பேசிக்கொண்டிருக்கும் சிஹல உறுமய மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன கூட, இந்தியாவின் கருத்தை எதிர்பார்க்கின்றன. இந்தியக் கருத்துக்கு, அந்தக் கட்சிகள் எதிராகச் செயற்படப்போவதில்லை.

மக்கள் விடுதலை முன்னணியும், சிஹல உறுமயவும் - இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில், மேற்குலக நாடுகளின் தலையீடுகளை எதிர்க்கின்றன. இந்தியத் தலையீட்டை ஏற்றுக்கொள்கின்றன. மக்கள் விடுதலை முன்னணி 1987 ஆம் ஆண்டில் மாகாணசபைத் திட்டத்தின்போது, முழுமையான இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இந்தியப் பொருட்களைக்கூட, இலங்கையர்கள் கொள்வனவு செய்யக்கூடாது என்ற கொள்கையை அது கடைப்பிடித்து வந்தது. ஆனால், அதன் ஸ்தாபகரும், கிளர்ச்சித் தலைவருமான ரோஹண விஜேவீர கொலையுண்டதையடுத்து, இந்தப் போக்கில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

மக்கள் விடுதலை முன்னணி - வெளியில் பெரிதாகக் காட்டிக்கொள்ளாவிட்டாலும், இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களைத் தவிர்த்தே வந்துள்ளது. சிஹல உறுமயவைப் பொறுத்தவரையில் - இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, இந்திய மத்தியஸ்தம் தேவை என்ற கருத்தை, வெளிப்படையாகவே வலியுறுத்தி வருகிறது.

எனவே, இந்தியா சரி என்று சொன்னால், எல்லாமே சரி என்றநிலையே இன்று நிலவுகிறது. மாற்று அரசாங்கக் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில்-அது இந்தியாவின் ஒவ்வொரு அசைவையும் தமது கட்சியின் வளர்ச்சிக்கு அல்லது புதிய அரசாங்கத்திற்கான அமைப்புக்காகப் பயன்படுத்திக்கொள்ள எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

அண்மையில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க - இந்தியாவில் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள ஆரம்பப் பேச்சுக்களை நடத்தியதைக்கூட, பொதுஜன ஐக்கிய முன்னணி பெரிதாக விரும்பவில்லை. ஏனெனில், அந்த நிகழ்வு தமது மாற்று அரசாங்கத்தின்கீழ் நிகழ்ந்திருக்குமானால், சாலவே பொருத்தமாக இருந்திருக்கும் என, பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் - இலங்கையின் சில கட்சிகளைத் தவிர, ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்துமே அவர்களின் இடைக்காலத்திட்ட தீர்வுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளன.

இலங்கை தற்சமயம் சர்வதேச நாடுகளின் கழுகுக் கண்களுக்குள் சிக்கியுள்ளன. பிரதானமாக ஒவ்வொரு நாடுகளும் இலங்கையின் இனப்பிரச்சினையில் ஏதேவொரு வகையில் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் - குறிப்பிட்ட சில வருடங்கள் - இலங்கை இனப்பிரச்சினை சர்வதேச கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்வில்லை என்று குறைகாணப்பட்டது. அதற்கு அன்றிருந்த தலைவர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால், இன்று அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே தகர்ந்துபோகும் வகையில், சர்வதேச கவனம் மற்றும் அனைத்து தலையீடும் இலங்கைக்குள் ஊடுருவிவிட்டது எனலாம்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் - இந்தியா மட்டுமே இலங்கை விடயத்தில் 'கவனிப்பாளன்' என்ற நிலைமாறி, இன்று இந்தியாவும்-இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் உதவலாம் என்ற கருத்து மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அமெரிக்கா-இந்தியாவுடன் தற்சமயம் எதிரி நாடு என்றநிலை இல்லாதபோதும், அமெரிக்காவின் இலக்கு மீதான தலையீடுகள் - இந்தியாவைப் பொறுத்தவரையில் விரும்பத்தகாத செயற்பாடேயாகும்.

எனினும், இலங்கைப் பிரதமருக்குச் செய்வதற்கு வேறுவழியில்லை. நோர்வே - என்று இலங்கையின் இனப்பிரச்சினையில் ஏற்பாட்டாளர் நிலையை ஏற்படுத்திக் கொண்டதோ, அன்றிலிருந்து அமெரிக்காவும் இலங்கை விடயத்தில் முக்கிய நாடாகத் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி - இலங்கையில் ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்திய ஆரம்பகட்டத்தில், முக்கிய விடயங்கள் குறித்து நோர்வே-அமெரிக்காவின் ஆலோசனைகளைப் பெறத் தவறியதில்லை. இது அமெரிக்காவுக்குக் கிடைத்த வாய்ப்புக்களில் சில கட்டங்களாகும்.

தற்சமயம்கூட, அமெரிக்கா - இலங்கை அரசாங்கத்தைப் பல்வேறு வழிகளில் தமது பக்கம் இழுத்துக்கொண்டிருக்கிறது.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க - இந்தியாவுக்குச்சென்று திரும்பிய உடனேயே, அமெரிக்காவுக்கும் சென்றிருப்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்.

எனவே, இன்று இலங்கை எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் - இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பதில்சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளது.

இதனைத்தவிர, இலங்கையின் முயற்சிகளைத் தீர்மானிக்கும் சக்திகளாக -உலகவங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. இனப்பிரச்சினைக்கு அப்பால், கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற பல நிகழ்வுகள் - அரசாங்கத்தின் இரண்டு பிரிவுகளான - ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும்,



பிரதமரின் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான முறுகல்களை அதிகரிக்கவே செய்துள்ளன. அரசாங்கத்திற்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக்கட்சி நடத்திய பேரணி இதில் முக்கியமானதாகும். பொதுவான பார்வையில் பேரணியில் பங்குகொள்வோரின் எண்ணிக்கை குறைவு எனக் கருதப்பட்டாலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்து நின்று, 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகளவு மக்கள் எண்ணிக்கையுடன் நடத்திய பேரணி இது வென ஜனாதிபதி கூறியுள்ளார்.

பேரணி நடந்துமுடிந்த பின்னர், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது. இது எதிர் காலத்தில் உத்வேகம் பெறவேண்டும் என்பதே ஜனாதிபதியின் எண்ணமாகும்.

இதற்கும் மேலதிகமாக, ஜனாதிபதிக்கு கடந்த வாரத்தில் பல முன்னேற்றகரமான அம்சங்களும் கிடைத்தன. முல்லைத்தீவுக் கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் இருந்ததாகக்கூறி, கடற்படை தெரிவித்த குற்றசசாட்டை அடுத்து, போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரை வீட்டுக்கு அனுப்புவதில் அவர் வெற்றிகண்டுள்ளார்.

அதற்கேற்ப பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக தமக்கு இருக்கும் அதிகாரம் குறித்து, உயர்நீதிமன்றின் சாதகமான தீர்ப்பு ஒன்று அவருக்குக் கிடைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவையாவும் ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், தமது கட்சியை வளர்த்துக்கொள்வதற்கான ஆரோக்கிய அம்சங்களாகும். அதிலும் குறிப்பிட வேண்டிய ஒன்று - ஐக்கிய தேசிக்கட்சியில் சேர்ந்துக்கொள்ளப் போவதாகப் பிரசாரம் மேற் கொண்டு வந்த ரிச்சட் பத்திரண - மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலேயே அங்கம் வகிக்கப் போகிறார் என்ற செய்தியாகும்.

மறுபுறத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில்-இந்த நான்கு விடயங்களும் பின்னடைவுகளே! ஆனால், எதிர்பார்த்தவைகளே என்பதால், ஐக்கிய தேசியகட்சி அதனை தீவிரமாகக் கருத்திற்கொள்ளவில்லை.

ஆனால், புத்திரசிகாமணியைப் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் பக்கம் கொண்டு சென்றமை, அதன் தொடர்பில் வேறுசிலரையும் இழுக்கின்ற முயற்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருகின்றது.

இறுதியாக சிங்கள-தமிழ் ஒன்று கூடலில் நடத்திய தாக்குதல் பற்றிப் பார்போம். முதல் நாள் இரவு வரையில் சிஹல உறுமயவினால் பொங்குதமிழ் என்று வர்ணிக்கப்படும் இந்த நிகழ்வின் மீது தாக்குதல் நடத்தப்படுவதில்லை என்றே இருந்தது. ஆனால், நிகழ்வின் முதல்நாள் காலையிலேயே தாக்குதலுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.

தாக்குதல் நடாத்தப்பட்டமை சிஹல உறுமயவைப் பொறுத்தவரையில் வீரச் செயலாக இருக்கக்கூடும். ஆனால், அது சமாதானத்தில் ஒரு பின்னடைவு. அரசாங்கத்திற்கு அந்தச் செயல் ஒரு பிரசாரமாகும்.

***

## கட்டாக்காலி கால்நடைகளால் விவசாயச் செய்கை பாதிப்பு

(சரசாலை)

தென்மராட்சி தெற்குப் பகுதியில் உள்ள தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி, நாவற்குழி ஆகிய இடங்களில் பெருமளவு கட்டாக்காலி மாடுகள் - விவசாய நிலங்களில் சேதம் விளைவித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்தகாலப் போரினால் மக்களால் கைவிடப்பட்ட 5000 இற்கும் அதிகமான மாடுகள் - பல்கிப்பெருகிப் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படுகின்றன. இவை, படையினரின் முட்கம்பி வேலியைத் திருடர்கள் வெட்டி எடுத்தமையால், இப்பாதையூடாக வயல்களில் புகுந்து, பயிர்களை நாசம் செய்கின்றன. இவற்றைப் பிடித்து, ஏலத்தில் விற்க கமநலசேவையினரை நடவடிக்கை எடுக்கவிடாது, கால்நடை உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

(34)

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார...

## 11. நிதி

ISGA ஓர் வருடாந்த வரவு - செலவு அறிக்கையைத் தயாரிக்கும்.

ISGA ஆல் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் - நிதி, நிர்வாகம், அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர் பதவி வகிப்பவர்களாகவோ அல்லது இத்துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் என இனங்காணப்பட்டவர்களாகவோ இருக்கவேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஒன்று திரட்டிய நிதியத்திலிருந்து (Consolidated fund) வடக்கு - கிழக்கிற்கு ஒதுக்கப்படவேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும். இப் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமவிகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ISGA தன்வசமுள்ள நிதிகளை எப்படிப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ISGA வசமுள்ள நிதிகளுள் வடக்கு-கிழக்குப் பொதுநிதியம், வடக்கு - கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்கு - கிழக்கில் அல்லது வடக்கு - கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ISGA இன் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.

11.1. **வடக்கு - கிழக்குக்கு பொதுநிதியம்**
வடக்கு - கிழக்கு பொதுநிதியம் ISGA இன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

11.1.a. இலங்கை அரசாங்கம் ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ISGA இற்கு வழங்கப்படும் ஏனைய பிற கடன்கள் மூலம் பெறப்படும் பணம்,

11.1.b. அரசுகளுடனோ, நிறுவனங்களுடனோ ஏனைய அமைப்புக்களுடனோ ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்கு - கிழக்கிற்கென சிறிலங்கா அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்

11.1.c. கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த, ISGA இற்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.

11.2 **வடக்கு - கிழக்கு மீள்கட்டுமான நிதியம்**
NERF அமைப்பு, கட்டுப்பாடு ISGA இற்கு மாற்றப்படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்தும் இருக்கும்.
வடக்கு - கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் NERF இற் கூடாகப் பெறப்படும். NERF நிதியத்திலிருந்து பெறப்படும் வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ISGA நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

11.3 **விசேட நிதியம்**
மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே வரும் கடன்களும் கொடுப்பனவுகளும், NERF நிதியத்தினூடாக உள்வரமுடியாதவிடத்து, இந்த விசேட நிதியத்திற்குள் உள்வாங்கப்படும். ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ISGA இன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

## 12. கடன் பெறுவதற்கும் உதவி பெறுவதற்கும் வர்த்தகத்திற்குமான அதிகாரங்கள்.

உள்ளூரிலும் வெளியூரிலும் கடன் பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதனை ஒழுங்கமைத்தல் போன்றனவற்றிற்கான அதிகாரங்களை ISGA கொண்டிருக்கும்.

## 13. நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்

13.1. ISGA ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வுசெய்யப்படும். சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும், ISGA ஆல் நியமிக்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

## 14. மாவட்டக் குழுக்கள்

14.1. தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் காத்திரமாகச் செயற்படுத்துகையில் மாவட்டங்களில் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக ISGA மாவட்டக்குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ISGA இற்கும் குழுக்களுக்குமிடையிலான ஒரு இணைப்பாளராகச் சேவையாற்றக் கூடியவாறு, ISGA இன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ISGA ஆல் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2. குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ISGA ஆல் நியமிக்கப்படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில் அனைத்து சமூகங்களினதும் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

14.3. இந்தக் குழுக்கள் ISGA இன் கீழ் நேரடியாகச் செயற்படும்.

14.4. ISGA இன் பிரதான செயலாட்சியாளர், மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயற்படுவார்கள். இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை பிரதான செயலாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5 குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

14.6 நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உப குழுக்களும் நியமிக்கப்படலாம்.

## 15. நிர்வாகம்

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் ஒரு பகுதியாக, இந்த ஒப்பந்தத்தின் சரத்து 9 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுடன் தொடர்புபட்ட வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து நிர்வாக அமைப்புக்களும் ஆளணியும் ISGA இன் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலின் கீழும் அமையும்.

ISGA தற்றுணிவுடன், தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக்குழுக்கள் பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதி விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள், அடிப்படைக் கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.

## 16 காணி நிர்வாகம்

சரத்து 9 இல் (ISGA இன் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால், வடக்கு - கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தை ISGA கொண்டிருக்கும்.

காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்றவற்றை, காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட, விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென காணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ISGA நியமிக்கும். விசேட ஆணைக்குழு செயற்படுகின்ற காலவரையறையை ISGA தீர்மானிக்கும்.

## 17. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும், இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொதுமக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேசச் சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்தக் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவற்றின் உரிமை முன்னைய உரித்தாளர்களுக்கு மீளளிக்கப்படவேண்டும். சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களது காணிகளைக் கடந்த காலங்களில் பறித்துவைத்திருந்தமைக்காக, இலங்கை அரசாங்கம் அவர்களுக்குக் கட்டாயம் நட்டஈடு செலுத்தவேண்டும்.

இந்தக் காணிகளில் இடம்பெயர்ந்த மக்களையும், அகதிகளையும் மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ISGA பொறுப்பாக இருக்கும்.

## 18. கடல் மற்றும் கரையோர வளங்கள்

வடக்கு - கிழக்கு நிலப் பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு, இந்த வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

## 19. இயற்கை வளங்கள்.

வடக்கு - கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ்வரவேண்டிய பணம் அனைத்தும் ISGA இற்கு செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ISGA இன் சம்மதத்துடனேயே செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற்கான ஒப்பந்தங்கள் ISGA உடன் செய்யப்படவேண்டும்.

## 20. நீர்ப் பயன்பாடு

ஆறுகளின் கீழ்ப்பகுதியில் நீர் பெறுவோருக்கு நீதியாகவும், நியாயமாகவும் சமஅளவிலும் நீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டிய கடப்பாடு, ஆறுகளின் தோற்றுவாய்ப் பகுதிகளில் நீர்பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசாங்கமும் ISGA உம் நீர்வளப் பாவனையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

## 21. ஒப்பந்தங்களும், குத்தகைகளும்.

ISGA இன் நியாயாதிக்கத்தின் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ISGA உடன் மேற்கொள்ளப்படவேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும். ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ISGA இற்கு கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்யவேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் ISGA இன் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

## 22. பிணக்குத் தீர்த்தல்

இந்த ஒப்பந்தச் சரத்துக்களுக்கு அர்த்தம் கற்பிப்பதிலோ, நடைமுறைப்படுத்துவதிலோ இருதரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு, அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்பட முடியாவிட்டால் - மூன்று அங்கத்தவர்கள் (இதில் இருவர், தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இரு தரப்பினராலும் நியமிக்கப்படுவர்) கொண்ட ஓர் இணக்க மன்றின் முன் விசாரிக்கப்படும். இருதரப்பினராலும் கூட்டாக நியமிக்கப்படும் மூன்றாவது அங்கத்தவர் மன்றின் தலைவராகச் செயற்படுவார். தலைவர் நியமனத்தில் ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு சர்வதேச நீதிமன்றின் தலைவரை (President of the International Court of Justice) இரு தரப்பினரும் கோருவர்.

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில், பிணக்குத் தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இலங்கை அரசாங்கத்தினதும் சமத்துவமான நிலையை உறுதி செய்வதோடு, இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாத்திரமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர்.

பிணக்குத் தீர்பவர்களது தீர்மானம் இறுதியானதும், முடிவானதாகவும் இருப்பதோடு, பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புக்களையும் கட்டுப்படுத்தும்.

## 23. செயற்படும் காலம்

பேச்சுவார்த்தை மூலமான நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்கு - கிழக்கிற்கென ஓர் புதிய அரசாங்கம் நிறுவப்படும்வரை, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடைய முடியுமோ அவ்வளவு விரைவாக அடைவதற்கு இருதரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

இருப்பினும்கூட, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் விதிகளை மேலும் அதிகரித்து, தெளிவுபடுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்தில் இருதரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும். ☆

## நாடாளுமன்ற சபாநாயகர் வைத்தியசாலையில் அனுமதிப்பு

(கொழும்பு)

இருதய வலி காரணமாக, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கண்டி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை கண்டி, கதீட்ரல் தேவாலயத்தில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றில் சபாநாயகர் கலந்துகொண்டிருந்தபோது திடீரென இருதய வலி ஏற்பட்டு கீழே விழுந்தார்.

உடனடியாக அவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர் (இருவேடம்), சறோஜாதேவி நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

விழியின் மீது விழிப்பாயிருங்கள்
சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகின்றீர்களா?
ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்ளா?
அப்படியாயின் நிச்சயம் கண்குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்
முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ளவும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்
546, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
222 - 2486
80. K.K.S வீதி. சுன்னாகம்.
கிளைகள்
91. K.K.S வீதி. கொக்குவில்.
(சி-1760)

பூசகர் தேவை
மூன்று காலப் பூசையை நேரந்தவறாது நடாத்துவதற்கு ஆசாரமும் நல்லொழுக்கமுமுள்ள நிரந்தரப் பூசகர் ஒருவர் தேவைப்படுகிறார்
சிவாச்சாரியார்கள், சைவக் குருமார்கள் தொடர்புகொள்ளவும்
காரியதரிசி
பரிபாலனசபை
துணவி அடிசடிப்பிள்ளையார் கோயில்
வட்டுக்கோட்டை
(521)

நமது ஈழநாடு நடாத்தும்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2003 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு
இடம்: யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபம்
காலம்: இன்று காலை 8.00 மணிக்கு
மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை வழங்குவோர்
ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
செலான் வங்கி டிக்கிரி கணக்கு
SEYLAN BANK LIMITED
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டபத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

அண்மையில் கொழும்பில் இருந்து வந்த வங்கி உத்தியோகத்தரான ஒரு நண்பரிடம் கொழும்பு நிலவரங்கள் குறித்து பேசிக்கொண்டிருந்த போது அவர் பல விடயங்கள் தொடர்பாக தனது கருத்துக்களைக் கூறினார். சமாதானத்திற்கான எதிர்ப்பு சக்திகள் பலம்பெற்று வருவதாகக் கூறினார். தென்பகுதி மக்களிடையே இனவாதம் புத்துயிர் பெற்றுவரும் நிலை தோன்றுவதாகவும், இனவாதிகள் சமாதானத்திற்கு எதிராக தனது செயற்பாடுகளை கிராமிய மட்டத்தில் இருந்து நகர மட்டம்வரை நன்கு திட்டமிட்டு கட்டம் கட்டமாக விஸ்தரித்து வருவதாகவும் கூறினார்.

சிஹல உறுமயவின் ஆர்ப்பாட்ட ஊர்வலம், கண்டியில் இருந்து புறப்பட்ட பாதையாத்திரை அவர்களுக்கு ஓரளவு வெற்றிகரமாக அமைந்ததாம்.

சமாதான எதிர்ப்பு சக்திகள் சமாதானத்தை எதிர்ப்பதற்காக மட்டும் ஐக்கியப்பட்டு செயற்படுகிறார்களாம், ஆனால் அரசாங்கமோ, ஐக்கிய தேசிய முன்னணியினரோ, சமாதான ஆதரவு அமைப்புக்ளோ தமது பலத்தை பெருமளவில் மக்களுக்கு காட்ட அப்படியான அடிமட்ட மக்கள் மத்தியிலான நடவடிக்கைகள் எதனையும் நடத்தவில்லை... வெறுமனே கருத்தரங்குகளை மட்டும் நடத்திக்கொண்டிருப்பதுதான் அபத்தமானது என்றார் அந்த நண்பர்.

அவர்கள் சமாதானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவர்கள் அதனை முழு மூச்சாக எதிர்க்காது, மௌனம் காத்து அவர்களுக்கு ஆதரவை வழங்குகிறார்கள் போலும் என்றார் இடையில் புகுந்த மற்றொரு நண்பர்.

தெருவாசி

# இலங்கை அரசியல்...

பெறவில்லை தமிழ் மக்களுடைய இந்தப் போராட்டம் அரசியல் அமைப்பில் தமிழ் மக்களைப் புறக்கணித்து உதாசீனப்படுத்தப்பட்டதால்தான் உருவாக்கப்பட்டது. இந்தப் போரும், பிரச்சினைகளும் அரசியல் அமைப்பின் அடிப்படையாகவே, எழுந்துள்ளது

சர்வதேசரீதியாக, இவ்வாறான சட்டப்பிரச்சினைகள் தொடர்பாக இனப்பிரச்சினைகள் நடைபெற்ற நாடுகளில் எல்லாம் அந்த நாட்டின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணப்படவில்லை.

தமிழ் மக்கள் தமது வாழ்வுக்காக பல ஆண்டுகளாகப் போராடி, எத்தனையோ விதமான அர்ப்பணிப்புக்களை செய்திருக்கிறார்கள். இலங்கையின் அரசியல் அமைப்பை மக்கள் அடிமை சாசனமாகவே நினைக்கிறார்கள். இதனால், இந்த அரசியல் அமைப்புக்கு உட்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியப்படாது.

தமிழ் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இத்தகைய முரண்பாடுகள் தான் இன்றைய நிலைக்குக் காரணம். இலங்கைத் தீவில் சமாதானம் உருவாக வேண்டுமானால் சாத்தியப்படக்கூடியதும் யதார்த்தமாக புதிய நோக்குடன் அணுகப்பட வேண்டும். இதன்மூலமாகவே உலக அரங்கில் சமாதான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. இதனடிப்படையிலேயே இந்தப் பிரச்சினைகளையும் அணுக வேண்டும்.

இதனையடுத்து - அரசியல் முரணபாடாகப் பார்க்காது ஒரு பொது நோக்குடன் அணுகினால்தான் தீர்வை எட்டமுடியும்.

இதனைவிடுத்து - அரசியல் அமைப்புக்கு முரணாக செயற்படுவதாக எதிர்க்கட்சிகள், இனவாதக் கட்சிகள் - அரசாங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்தால் அதனை அவர்கள் திருப்திப்படுத்த வேண்டுமென நினைத்து, தீர்வை எட்ட வேண்டுமென நினைத்தால், அது ஒருபோதும் முடியாத காரியம்.

இடைக்கால நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டால் வடக்கு-கிழக்குப் பாதுகாப்பு, அந்தப்பகுதியில் உருவாக்கப்படும் கட்டமைப்புக்கள் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு அரச கட்டுப்பாட்டுப் பிரதேசம், விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப்பிரதேசம் என இருப்பதால் பாதுகாப்பு விடயத்தில் முரண்பாட்டை ஏற்படுத்தும் என்பதற்கு அப்பால், இந்தப் பிரசேதம் இணைந்த ஒரு நிர்வாக அலகை ஏற்படுத்தி அதனூடாக ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கி தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய சூழலை உருவாக்கிக் கொள்ளலாம்.

இந்த இருவேறு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்றே நாம் இந்த வரைபை தயாரித்துள்ளோம்.

அரசாங்கத்துக்கு திட்டவரைபைக் கையளித்துள்ளோம். அவர்கள் இது தொடர்பாக பேசி முடிவெடுக்க வருவார்களானால் அதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்கின்றோம். இதனையடுத்து காலவரையறையைப் போடுவது சமாதான முயற்சியைப் பாதிக்கும். இந்தப் பிரச்சினையொரு மனிதாபிமானப் பிரச்சினையாக இருபதால் துரித கதியில் நடவடிக்கை எடுத்து, மிக விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆலோசனை பற்றி, இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இரு தரப்புக்கும் வசதியான இடத்தில், வசதியான காலத்தில், அனுசரணையாளர் முன்னிலையில் கலந்துரையாடலை நடத்தக் கூடியவாறு - ஒரு சந்திப்பை ஒழுங்கு செய்யுமாறு நோர்வே அரசாங்கத்தை நாம் கேட்டுள்ளோம்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு இயல்பு நிலையையும், பொருளாதார அபிவிருத்தியையும் சீரிய முறையில் ஏற்படுத்துவதற்காக, இலங்கை அரசுடனான எமது கலந்துரையாடல்களை தொடர்ந்து மேற்கொண்டு, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அமைப்பதில் விரைவான இணக்கப்பாட்டை அடைய நாம் விரும்புகின்றோம்.

இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபையை அமைப்பது, இந்தத் தீவிலுள்ள பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான பேச்சுக்களை நடத்துவதற்குரிய ஒரு சூழலை வழங்குமென நாம் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (108)

### ட்ரக்வண்டி...

விஜயரத்தினம் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார். இந்த விபத்தையடுத்து அப்பகுதியில் மக்கள் பெருந்திரளாகக் கூடிய போதிலும் அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் அவர்களைக் கலைந்து செல்லச் செய்துள்ளனர். (202)

# பெரும்பான்மையோரின் உரிமைகள் சிறுபான்மையினருக்கும் உரியதே

## சமூக நலன்புரி அமைச்சர் உரை

(கொழும்பு)

இந்த நாட்டில் பெரும்பான்மை இனத்தவருக்குரிய சகல உரிமைகளும், சிறுபான்மையினருக்கும் உண்டு. இதனை உணராத சில தீவிர இனவாதக் குழுக்களே சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனைகின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளார். சமூக நலன்புரி அமைச்சர் ரவீந்திரசமரவீர.

நேற்றுக் கல்முனையில் சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையைத் தொடங்கி வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஏற்பட்டுவருகின்ற சமாதான சகவாழ்வினைக் குழப்புவதற்கு பல தீயசக்திகள் முனைகின்றன. இதற்குப் பொதுமக்கள் இடமளிக்கக்கூடாது.

இந்த நாட்டில் வாழும் அனைவருக்கும் சகல உரிமைகளும் உண்டு.

இத்தகைய இனவாதிகளின் செயல்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இரையாகிப் போகாது.

மக்கள் கடந்த பொதுத்தேர்தலின் போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசிற்கு வாக்களித்து, சமாதானத்தைக் கொண்டுவர ஆணையளித்தனர். இவ் ஆணையை நிறைவேற்ற அரசாங்கம் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களுடன் கடினமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த 20 ஆண்டுகால யுத்தம் தணிவடையும் நிலையில் உள்ளது. இதனை விரும்பாத சிலர் நாட்டில் மீண்டும் யுத்த மேகத்தை ஏற்படுத்தி நாட்டை அழிக்க சதி செய்துகொண்டிருக்கின்றனர்.

இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் தேசப்பற்று உடையவர்களாக இருக்கமாட்டார்கள். நிச்சயமாக அவர்கள் தேசத்துரோகிகளாகவே இருப்பார்கள்.

இத்தகைய விசமிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் இன முரண்பாட்டை ஏற்படுத்தி, அதன் மூலம் கிழக்கில் அமைதியின்மையை தோற்றுவிக்க முயல்கின்றனர்.

இச் சதிவலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் விழுந்துவிடக் கூடாது. அரசாங்கம் ஒருபோதும் சிறுபான்மையினருக்கு துரோகம் இழைக்காது. அதனை நினைத்து யாரும் கவலைப்படத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வடக்கு ....

ஒழுங்கும் மற்றும் அவை தொடர்பாக அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்கு - கிழக்கை ஆளுகை செய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

நீதியை வடக்கு - கிழக்கில் நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அந்த அமைபபுக்கு நீதி அதிகாரங்கள் உருவாக்கப்படும்.

வடக்கு - கிழக்கில் அல்லது வடக்கு - கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதை அரசு ஏற்றுக் கொள்வதுடன், அதிகாரசபை ஒரு வருடாந்த வரவு செலவுத்திட்ட அறிக்கையைத் தயாரிக்கும்.

அத்துடன் வடக்கு - கிழக்குக்கு பொது நிதியம், மீள் கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகிய வற்றை அமைப்பது குறித்தும் திட்டவரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்தும் அதிகாரங்களையும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை கொண்டிருக்கும்.

அத்துடன், அரச படைகளால் ஆக்கிரமிக்கப்படடுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவற்றின் உரிமையை முன்னைய உரிமையாளர்களுக்கு மீளளிக்கவும், அவைகளைப் பறித்து வைத்திருந்தமைக்காக அரசு நட்டஈடும் செலுத்த வேண்டும்.

மேலும் கடல் மற்றும் கரையோர வளங்கள், இயற்கை வளங்கள், நீர்ப் பயன்பாடு போன்றவற்றில் இந்த அதிகாரசபை அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்கு-கிழக்கிற்கென புதிய அரசாங்கம் நிறுவப்படும் வரை இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஒப்பந்தம் நடைமுறையில் இருக்குமெனவும், இந்தத் தீர்வை விரைவில் எட்டுவதற்கான பேச்சுக்களில் இரு தரப்பும் ஈடுபடும் எனவும் இந்தத் திட்டவரைபில் கூறப்பட்டிருப்பதோடு,

நான்கு வருடங்கள் முடிவில் இறுதி உடன்பாடு எதுவும் எட்டப் படாவிட்டால், ஒப்பந்த விதிகளை மேலும் அதிகரித்து வலுப்படுத்தும் நோக்கில் இரு தரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுக்களில் ஈடுபடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(9,108)

# வடமராட்சி கிழக்கில் மணல் அள்ள அனுமதி

வடமராட்சி கிழக்கில் கட்டிட வேலைகளுக்கான மணல் வழங்கும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கட்டுப்பாடற்ற முறையில் மணல் அள்ளப்படுவதை கருத்தில் கொண்டு அப்பகுதி பொது அமைப்புக்கள் அங்கு மணல் அள்ளுவதை கடந்த ஒரு மாதகாலமாக தடைசெய்திருந்தன.

எனினும், யாழ். மாவட்டத்தின் பல்வேறு புனர்நிர்மாண பணிகளுக்கும் மணல் தேவைப்படுவதை அடுத்து, அப்பகுதி பொது அமைப்புக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்த மணல் வழங்கும் நடவடிக்கைக்கென அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழு மணல்பிட்டிகள் உள்ள இடங்களில் மணல் அள்ள ஒழுங்குகளை மேற்கொள்வதுடன், சட்டவிரோத மணல் அகழ்வையும் தடுக்கும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

### 'விடுதலைப் புலிகள்' ஏடு இன்று வெளிவருகிறது

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகை இன்று வெளிவருகிறது.

### மாத....

கள் செய்யப்படும். இதன் முதற் கட்டமாகவே - இரு தரப்பும் திட்ட வரைபுகள் குறித்து பேச்சுக்களை நடத்துவதற்கு, நோர்வேயிடம் - அரசு கோரியுள்ளது.

இந்தச் சந்திப்பின் மூலம், ஆரம்ப கட்ட சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்றும், இந்த பேச்சுக்கள் அடுத்தவருட முற்பகுதியில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப் படுமெனவும் பீரிஸ் தெரிவித்தார். (01)

### விடுதலைப்...

சுக்கள் ஆரம்பமாகி அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு ஏற்படுமென, எதிர்பார்ப்பதாகவும், இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் தன்மைகளுககேற்ப சர்வதேச சமூகத்தின் உதவிகள் அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹக்கீம்....

இடைக்கால நிர்வாகம் தொடர்பான நகல் பிரதியொன்றை அமைச்சரிடம் கையளித்தபின், நேற்றுமாலை இருவரும் மீண்டும் சந்தித்துப் பேசியுள்ளதாக, ஊடகமொன்று நேற்றுமாலை தகவல் வெளியிட்டது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமும், அவரது முஸ்லிம் அரசியல் ஆய்வுக்குழுவும் தற்போது லண்டனில் தங்கியிருக்கின்றமை தெரிந்ததே.

### தமிழீழத்துக்கான....

எமது ஒத்துழைப்பு இருக்காது. இந்தத் தீர்வுத் திட்டம் - சிங்கள, முஸ்லிம் மக்களைப் பாதிப்பதாவும், புலிகள் தமிழீழத்தை அமைக்க வழி செய்வதாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில்02.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.